O.S.No. 85/2014 Date : 16.12.2019

சாட்சி இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

குவி:

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் நான் என்ன தொழில் பார்க்கிறேன் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, விவசாய வேலை பார்க்கிறேன். என்னுடைய விவசாய வேலைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தைக் கொண்டு தான் தாவா கடனை கொடுத்தேன். நான் 9 ஆம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன். நான் கரிவலம்வந்தநல்லூர், ஆலமநாயக்கர் பட்டியில் நான் படித்தேன். நான் முதன் முதலில் கரிவலம்வந்தநல்லூரில் படித்தேன், அதன் பின்பு ஆலமநாயக்கர்பட்டியில் படித்தேன். ஆலமநாயக்கர்பட்டியில் 9 ஆம் வகுப்பு மட்டும் படித்தேன். ஆலமநாயக்கர்பட்டியில் என்னுடைய சித்தி வீடு இருந்ததால் அங்கேயே நான் படித்தேன். என்னுடைய சித்தியின் பெயர் கோசலையம்மாள் ஆகும். 1982 ஆம் ஆண்டு ஆலமநாயக்கர்பட்டியில் படித்தேன். நான், ரெட்டியப்பட்டியிலிருந்து, கரிவலம்வந்தநல்லூருக்கு நடந்தே சென்று படித்தேன். ரெட்டியபட்டிக்கும், கரிவலம்வந்தநல்லூருக்கும் இடையே டவுண் பஸ் உண்டு என்றால் இல்லை. அப்ரானந்தம் என்ற பேருந்து சங்கரன்கோவிலிருந்து வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெட்டியபட்டி முக்கு ரோட்டிலிருந்து சங்கரன்கோவிலுக்கு செல்வதற்கு 50 பைசா தான் பேருந்து கட்டணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சைக்கிளில் சென்று படித்து இருக்கலாம் என்றால் சரிதான், ஆனால் நான் சைக்கிள் வாங்கவில்லை. எங்கள் ஊரிலிருந்து சுமார் 20 பேர் சைக்கிளில் வந்து படித்து சென்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சைக்கிள் வாங்க வசதி இல்லாததால் தான் என் சித்தி வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல, எனக்கு அன்றைய தினம் சைக்கிள் ஓட்ட தெரியாது. என்னோடு படித்தவர்கள் தற்போது டாக்டர், இஞ்சினியராக வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆலமநாயக்கர்பட்டியிலிருந்து, சங்கரன்கோவிலில் நிறைய வழக்கறிஞர் வக்கீல் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் எனக்கு உறவுக்காரர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஆலமநாயக்கர்பட்டிக்கும், ரெட்டியபட்டிக்கும் இடையே 18 கி.மீ

தூரம் இருக்கும். எனக்கு பிரதிவாதி ஜெயலட்சுமியை 54 வருடங்களாக தெரியும். ஜெயலட்சுமி தற்போது எங்கு குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. ஜெயலட்சுமிக்கு சொந்தமாக வீடு இல்லை என்றால் ஊரில் ஒரு வீடு உள்ளது. அது அவர் பெயரில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. கடன் கொடுத்த ரூ.7 லட்சத்தில் 3 1/2 லட்சம் என் கைவசமே இருந்தது. என்னுடைய பணம் என்னுடைய சித்தி மகாலட்சுமியிடம் ரூ.1 லட்சம் இருந்தது. என்னுடைய மாமா கணபதிசாமியிடம் என்னுடைய பணம் ரூ. 1 1/2 லட்சம் இருந்தது. நான் அவர்களுக்கு வட்டிக்கு தான் கடன் கொடுத்திருந்தேனா என்றால் இல்லை, கொடுத்து வைத்திருந்தேன். என்னுடைய மாமா ஊருக்கும், என்னுடைய ஊருக்கும் 35 கி.மீ தூரம் இருக்கும். என்னுடைய மாமா அவருடைய ஊரில் 100 ஏக்கருக்கு மேல் வைத்து தொழில் செய்யும் பெரிய விவசாயி என்றால் சரிதான். என்னுடைய மாமா எலுமிச்சை மரங்கள் வைத்துள்ளார். அந்த எலுமிச்சை மரங்கள் சமீபத்தில் தான் வைக்கப்பட்டுள்ளது. என்னுடைய மாமா வீட்டு கிணறு வற்றாத கிணறு என்றால் கோடையில் வற்றி விடும். என்னுடைய மாமா வீட்டு சொத்தை குத்தகை பார்த்து வந்தேன் என்பதற்கோ, என் மாமாவிடம் நான் ரூ.1 1/2 லட்சம் கொடுத்து வைத்திருந்தேன் என்பதற்கோ ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். நான் கடன் கொடுத்த தொகை ரூ.7லட்சத்தை கணக்கு காட்ட வேண்டும் என்பதற்காகத் தான் நான் என் மாமாவின் சொத்தை குத்தகைக்கு பார்த்து வருமானம் பெற்றதாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஜெயலட்சுமி எதற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்றால் அவருடைய சொந்த செலவிற்காக வாங்கினார். சொந்த செலவு என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமிக்கு வேறு கடன்கள் இருந்ததா, இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள தீர்ப்புக்கு முன் ஜப்தி மனுவில் ஜெயலட்சுமிக்கு நிறைய கடன்கள் உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் என்னுடைய முன் ஜப்தி மனுவில் ஜெயலட்சுமிக்கு கடன்கள் அதிகமாக உள்ளது என்றும், அவர் சொத்தை விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் அது எனக்கு நினைவில்லை. என்னிடம் யாரும் வந்து ஜெயலட்சுமி அவருடைய சொத்தை விற்பனை செய்ய போவதாக சொல்லவில்லை. ஜெயலட்சுமிக்கு கடன்கள் ஏதும் இல்லை என்றாலும், அவருக்கு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக

ஜெயலட்சுமியின் சகோதரர்களுடன் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. ஜெயலட்சுமியும், அவருடைய சகோதரர்களும் அப்பொழுது பேசிக் கொள்ள மாட்டார்கள், அதனால் நான் விசாரிக்கவில்லை. சீனிவாசன் என்பவர் தான் ஜெயலட்சுமிக்கு மாதம், மாதம் தொகை செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சீனிவாசன் வீட்டில் தான் ஜெயலட்சுமி குடியிருந்து வருகிறார் என்றால் ஜெயலட்சுமி குடியிருந்து வரும் விபரம் தெரியும். ஆனால் அந்த வீடு ஜெயலட்சுமியின் வீடா? அல்லது அவருடைய சகோதரர் சீனிவாசன் வீடா? என்பது எனக்கு தெரியாது. சீனிவாசன், போலப்பன் ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் பணம் கொடுப்பதற்கு முன்பாக அவர்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை. போலப்பன் தான், சீனிவாசனிடமிருந்து வரும் பணத்தை ஜெயலட்சுமிக்கு கொடுப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தொகையை வைத்து தான் ஜெயலட்சுமி வாழ்ந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டு என்னுடைய வீட்டில் வைத்து தான் எழுதினோம். அந்த புரோநோட்டை சங்கரன்கோவிலை சேர்ந்த திருவள்ளுவர் என்பவர் எழுதினார். புரோநோட்டை எழுதிய திருவள்ளுவரை எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியாது. அவரை, மாரியம்மாள் என்பவர் தான் அழைத்துக் கொண்டு வந்தார் என்றால் யார் அழைத்துக் கொண்டு வந்தார் என்று நான் பார்க்கவில்லை. எனக்கு சங்கரன்கோவிலில் அனைத்து இடங்களும் நன்றாக தெரியும் என்றால் தெரியாது. என்னுடைய மாமா அட்சய நாயக்கர் சுவாமி சன்னதியில் கடை வைத்து வருகிறார் என்றால் அவர் சொந்த மாமா இல்லை, அவர் உறவுக்காரர் தான். அவர் கடை வைத்திருக்கிறாரா, இல்லையா என்று எனக்கு தெரியாது. வீராச்சாமி நாயக்கர் என்பவரை எனக்கு தெரியும். அவர், என்னுடைய அத்தையின் கணவர். அட்சயநாயக்கரும், வீராச்சாமி நாயக்கரும் அண்ணன், தம்பி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அத்தையின் கணவரோடு உடன்பிறந்தவர்கள் யார், யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு என்னுடைய அத்தையை பற்றி தெரியும். நான் அட்சயநாயக்கரையும், வீராச்சாமி நாயக்கரையும்தெரியாது என வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அவர்களை தெரியும் என ஒப்புக் கொண்டால் திருவள்ளுவர் எனக்கு தெரிந்தவராக தெரிந்து விடும் என்பதால் தான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா புரோநோட்டு எழுதும்பொழுதும் நாட்டாண்மை, பஞ்சாயத்து தலைவர்களிடமும் கடன் கொடுத்த விபரங்கள் பற்றி

சொல்லவில்லை. அவர்களை அழைக்கவும் இல்லை. பணம் கொடுக்கும்பொழுதும் அவர்களை நான் கூப்பிடவில்லை. கடன் ரூ.7 லட்சத்தை பணக்கட்டாக கொடுத்தேன். அவர்கள் எண்ணினார்கள். நான் அன்றைய தினம் ரூ.7லட்சத்தை எண்ணவில்லை. பணத்தை மாரியம்மாள் எண்ணினார். மாரியம்மாள் பணத்தை எண்ணி ஜெயலட்சுமியிடம் கொடுத்தார். நான் கொடுத்த 7 பணக்கட்டுகளும் ரப்பர்பேண்டால் கட்டப்பட்டிருந்தது. நான் பணத்தை கையில் எடுத்து வந்து கொடுத்தேன், அதை ஜெயலட்சுமி வாங்கி மடியில் வைத்துக் கொண்டார். நான், ஜெயலட்சுமியிடம் பணத்தை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள் என சொன்னேனா என்றால் சொல்லவில்லை. ஜெயலட்சுமி என்னிடம் பணம் வாங்கும்பொழுது அவரோடு யாரும் வசிக்கவில்லை. புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்ட செல்லையாவிற்கு பருவக்குடி தான் ஊர். பருவக்குடிக்கும், ரெட்டியார்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். செல்லையா நான் பணம் கொடுக்கும்பொழுது என்னுடைய வீட்டில் இருந்தார். ஜெயலட்சுமி என்னுடைய வீட்டிற்கு வருவதற்கு முன்பாகவே செல்லையா என் வீட்டிற்கு வந்துவிட்டார். செல்லையாவை எனக்கு, நான் பணம் கொடுப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பிருந்து தெரியும். செல்லையாவிற்கு சொந்த வீடு, சொத்து எதுவும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் எந்த ஊரில் திருமணம் செய்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. ராஜகுரு என்பவர் மூலமாகத் தான் செல்லையா என்பவரை எனக்கு தெரியும் என்றால் ராஜகுரு மூலமாக செல்லையாவை எனக்கு தெரியாது. செல்லையாவிற்கு எத்தனை குழந்தைகள் இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

வழக்கானது குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டது.